**100 % வாக்களிக்க உறுதி செய்வோம்!**
**ENSURE 100% VOTING!**

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 07** **நாள்: 19.03.2019**

**பாராளுமன்ற பொதுத் தேர்தல்–2019ல் "எந்த ஒரு வாக்காளரும் விடுபடக் கூடாது" என்ற குறிக்கோளுடன் 100% வாக்குப்பதிவை உறுதி செய்ய பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேர்தல் விழிப்புணர்வு மனித சங்கிலி மாவட்ட தேர்தல் அலுவலர் / ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 18.04.2019 அன்று நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத்தேர்தல்–2019 மற்றும் எண்.12 பெரம்பூர் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு, **"எந்த ஒரு வாக்காளரும் விடுபடக் கூடாது" (No Voter to be Left Behind) என்ற குறிக்கோளுடன் 100% வாக்குப்பதிவை உறுதி செய்ய பொதுமக்களிடம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.**

இதன் ஒருபகுதியாக அனைவரும் வாக்களிப்பதன் அவசியம் குறித்து, தரமணி டைடல் பார்க் வளாகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களுடன் மனித சங்கிலி அமைத்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் தலைமையில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து, தேர்தல் விழிப்புணர்வு வீடியோ காட்சிகளை ஒளிபரப்பும் செய்தி மக்கள் தொடர்பு துறையின் அதிநவீன மின்னணு வீடியோ வாகனத்தினையும் மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

பாராளுமன்ற பொதுத்தேர்தல் மற்றும் பெரம்பூர் சட்டமன்ற இடைத்தேர்தலையொட்டி பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. புதிய வாக்காளர்களை சேர்க்க மார்ச் 16ம் தேதி வரை பெறப்பட்ட படிவம் 6ன்படி வாக்காளர்களின் பெயர் அடங்கிய துணை வாக்காளர் பட்டியல் வருகின்ற 26ம் தேதிக்குள் முடிவடையும்.

சென்னையில் 3,754 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளது. அவற்றில் பொதுமக்கள் சிரமமின்றி வாக்களிக்க ஏதுவாக அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. 48 பறக்கும் படைக் குழுக்கள் மற்றும் நிலைக்கண்காணிப்பு குழுக்களால் தகுந்த ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.9.74 இலட்சம் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

வங்கி கணக்குகளில் வழக்கத்திற்கு மாறாகவோ அல்லது சந்தேகத்திற்கிடமான வகையிலோ ரூ.1 இலட்சத்திற்கு மேல் பணப்பரிவர்த்தனை நடைபெற்றால் உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் தெரிவிக்கும்படி வங்கியாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலின் போது வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் செலவினங்களை பார்வையிட மத்திய தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள், டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் திரு.பி.இளங்கோவன், இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர் திரு.அ.உமாபதி, அடையாறு மண்டல அலுவலர் திரு.பால் தங்கதுரை, செயற்பொறியாளர் திரு.ஆர்.முரளி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**